**செய்தி வெளியீடு எண்: 976 நாள்:19.12.2020**

**இன்று (19.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி, ஆலச்சம்பாளையத்தில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை திறந்து வைத்து ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

எடப்பாடி நகராட்சி, ஆலச்சம்பாளையத்தில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டு வருகிறது. சென்னையிலேயே நானும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு முதற்கட்டமாக தொடங்கி வைத்தோம். தமிழ்நாடு முழுவதும் அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் 100 அம்மா மினி கிளினிக் தொடங்கப்படுமென்று அறிவித்து, இதுவரை சேலத்தில் கொண்டலாம்பட்டி, லத்துவாடி பகுதியில் தொடங்கப்பட்டு, இன்றையதினம் எடப்பாடி பகுதியில் நங்கவள்ளியில் பெரியசோரகை, எடப்பாடி ஒன்றியத்தில் இருப்பாளி, எடப்பாடி நகராட்சியில் ஆலச்சம்பாளையம், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் எட்டிக்குட்டைமேடு ஆகிய நான்கு இடங்களில் தொடங்கியுள்ளோம்.

இந்த மினி கிளினிக்கில் ஒரு எம்.பி.பி.எஸ். மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கில் சிகிச்சை பெற வரும் மக்களுக்கு கடுமையான நோய் ஏதேனும் தாக்கியிருந்தாலோ அல்லது அறுவை சிகிச்சை செய்து குணமடையச் செய்ய வேண்டிய நிலையிலிருந்தாலோ, மினி கிளினிக் மருத்துவரே, அவர்களை மேல் சிகிச்சைக்காக சேலம், தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க நடவடிக்கை மேற்கொள்வார். அதுமட்டுமல்லாமல், நடமாடும் மருத்துவக் குழுவும் அமைத்திருக்கிறோம்.

எடப்பாடி நகரத்தில் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனையை விரிவுபடுத்தியிருக்கிறோம். வெள்ளார்நாயக்கன்பாளையம், ஆலச்சம்பாளையம் ஆகிய இரு இடங்களில் அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டுள்ளது, விரைவில் வீரப்பன்மலையில் தொடங்கப்படும். ஆக, எடப்பாடி நகராட்சியில் மட்டும் 3 அம்மா மினி கிளினிக் தொடங்கப்படுகிறது.

நான் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டபோது, எடப்பாடி மக்கள் வைத்த கோரிக்கைகளான பாதுகாக்கப்பட்ட காவேரி தண்ணீர் வழங்கும் திட்டத்தை நிறைவேற்றித் தந்துள்ளோம். மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தபோது பூலாம்பட்டியிலிருந்து எடப்பாடி நகரத்திற்கு ஒரு தனி குடிநீர் திட்டத்தை அறிவித்து, அதை நிறைவேற்றி இப்போது எடப்பாடி நகர மக்களுக்கு தங்குதடையில்லாமல் 30 வார்டு மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

தனியார் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க முடியாத ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவச் செல்வங்கள் கல்வி பயில எடப்பாடியிலிருந்து சங்ககிரி செல்லும் வழியில் பிரம்மாண்டமான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கொடுத்துள்ளோம். சுமார் 1,700 மாணவர்கள் அந்தக் கல்லூரியில் படிக்கின்றனர். தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், நெடுஞ்சாலை துறைக்கும் கோட்டப் பொறியாளர் அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து சாலைகளையும் சீர் செய்திருக்கின்றோம். அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தை சீர் செய்துள்ளோம். பேருந்து நிலையத்திற்கு அருகில் ரூபாய் 3.50 கோடி மதிப்பீட்டில் இந்து சமய அறநிலையத் துறை சார்பாக திருமண மண்டபம் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு எதிரில் வணிக வளாகம் கட்டிக் கொடுத்ததுடன், பூங்காவும், பேருந்து நிலையத்திற்கு அருகில் நீரூற்றும் அமைத்துக் கொடுத்துள்ளோம். நகராட்சி அலுவலகம் கட்டிக் கொடுத்துள்ளோம். கழிவுநீர் செல்ல கழிவுநீர் கால்வாய்கள் அமைத்துக் கொடுத்துள்ளோம். வெல்லாண்டிவலசிலிருந்து கவுண்டம்பட்டி வருவதற்கு பாலம் கட்டிக் கொடுத்துள்ளோம். பேருந்து நிலையத்திற்கு அருகில் புதிய பாலம் கட்டிக் கொடுத்துள்ளோம். கவுண்டம்பட்டியிலிருந்து பள்ளிக்குச் செல்ல சிறிய பாலம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள சரபங்கா நதிப் பகுதியை சுத்தம் செய்து கான்கிரீட் அமைக்கும் பணி தொடங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் 1,400 அடுக்குமாடிக் குடியிருப்பு வீடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆலச்சம்பாளையத்தில் 352 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. எடப்பாடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் 5 நிழற்கூடங்கள் கட்டிக் கொடுத்துள்ளோம். எடப்பாடி நகரத்தில் மட்டும் 12 நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுத்துள்ளோம். ஆலச்சம்பாளையம் பகுதியில் மட்டும் 3 நியாய விலைக் கடைகள் கட்டிக் கொடுத்துள்ளோம். ஏறக்குறைய மக்கள் வைத்த பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளோம். எடப்பாடி தொகுதி மக்கள் வைக்கும் கோரிக்கைகள் நூற்றுக்கு நூறு சதவிகிதம் நிறைவேற்றப்படும். உழைக்கும் திறனற்ற முதியவர்களுக்கு முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல் வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு பட்டா மாறுதல்கள், வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளோம்.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த 41 விழுக்காடு மாணவர்களில் கடந்த ஆண்டு 6 மாணவர்களுக்குத் தான் மருத்துவப் படிப்பிற்கான இடம் கிடைத்தது. எனவே, அந்த மாணவச் செல்வங்களுக்கு 7.5 விழுக்காடு மருத்துவக் கல்வி பயில உள் இடஒதுக்கீடு அறிவித்து, அதன் மூலம் 313 எம்.பி.பி.எஸ் மருத்துவர்கள் உருவாவதற்கு வழிவகை செய்துள்ளோம். எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் இந்த ஆண்டு அரசுப் பள்ளிகளில் படித்த 5 மாணவச் செல்வங்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்துள்ளது. அடுத்த ஆண்டு இன்னும் கூடுதலாக மாணவச் செல்வங்களுக்கு மருத்துவப் படிப்பில் இடம் கிடைக்கும். ஏனென்றால் புதிதாக 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை ஒரே நேரத்தில் தொடங்கியதன் விளைவாக கூடுதலாக 1,650 இடங்கள் தோற்றுவிக்கப்படுகிறது. இதில் 7.5 விழுக்காடு உள் இட ஒதுக்கீடு என வரும்போது, சுமார் 135 மருத்துவ இடங்கள் கிடைக்குமென நம்புகிறோம்.

அதோடு,15 நாட்களுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி அவர்கள் திமுகவின் பிரச்சாரத்தை எடப்பாடி தொகுதியிலிருந்து தொடங்கியுள்ளார். அப்போது, எடப்பாடியில் முதலமைச்சர் ஏதும் செய்யவில்லை என்று சொல்லிச் சென்றுள்ளார். நான் செய்தவற்றை இங்கே குறிப்பிட்டுள்ளேன். ஆனால், அந்த அம்மாவிற்கு தெரியவில்லை, தெரிந்தும் தெரியாததுபோல் நடிக்கிறார்கள். நான் முதலமைச்சராவதற்கு முன்பு எடப்பாடி எப்படி இருந்தது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 2011–ஆம் ஆண்டு நீங்கள்

வைத்த கோரிக்கையை ஏற்று நான் பெரும்பாலான கோரிக்கைகளை நிறைவேற்றியுள்ளேன். 2011–க்கு முன்பு எடப்பாடி எப்படி இருந்தது, இப்போது 2020–இல் எடப்பாடி எப்படி இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

புறவழிச் சாலை அமைத்துக் கொடுத்திருக்கிறோம். எடப்பாடியிலிருந்து பல்வேறு நகரங்களுக்குச் செல்ல பேருந்து வசதிகள் செய்து கொடுத்துள்ளேன். எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 15 பேருந்துகளை புதிய வழித்தடங்களில் இயக்கியிருக்கின்றேன்.

அதோடு, தைப் பொங்கல் வரவிருக்கின்றது. அந்தத் தைப்பொங்கலன்று அனைவரும் சிறப்பாக தைப்பொங்கலைக் கொண்டாட வேண்டும். கொரோனா வைரஸ் தொற்று ஏறத்தாழ 8 மாதமாக இருந்த காரணத்தால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு, வேலையில்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. இதனை கருத்தில்கொண்டு, ரங்கராஜன் கமிட்டி அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது. ஆகவே, மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அரசாங்கம் மூலமாக நிதியுதவி செய்ய வேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டது. அதோடு, அண்மையிலே, டெல்டா பகுதியிலே புயல், கனமழை, அதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, கொரோனா மற்றும் புயல், கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களை எண்ணி வருகின்ற தைப்பொங்கலன்று எல்லா இல்லங்களிலும் தைப்பொங்கல் பொங்க வேண்டுமென்பதற்காக அம்மாவின் அரசு தமிழகத்தில் இருக்கின்ற 2 கோடியே 6 இலட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் 2,500 ரூபாய் வழங்கப்படுமென்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன். அதோடு, எப்போதும் வழங்குவதுபோல வேட்டி, சேலையும் வழங்கப்படும். அதோடு, ஒரு கிலோ அரிசி, ஒரு கிலோ சர்க்கரை, கரும்பு ஒரு துண்டுக்கு பதிலாக முழுக் கரும்பு, உலர் திராட்சை, முந்திரி, ஏலக்காய் வழங்கப்படும். இவற்றையெல்லாம் எடுத்துச்செல்ல நல்ல பையும் வழங்கப்படும். ஆகவே, தைப்பொங்கலன்று அனைவரும் சிறப்பாக தைப்பொங்கலை கொண்டாட வேண்டும் என்பதற்காக அம்மாவின் அரசு இந்த தொகுப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அம்மாவின் அரசு மக்களுடைய அரசு, உங்களுடைய அரசு. ஆகவே, மக்களுக்காக எண்ணற்ற திட்டங்களை நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு கல்வியிலே புரட்சி, வேளாண்மையிலே புரட்சி, இப்படி எல்லா துறைகளிலும்

புரட்சி காணுகிற ஒரே அரசு அம்மாவின் அரசு. மக்கள் அனைவரும் அம்மாவின் அரசுக்குத் துணை நிற்க வேண்டுமென்று கூறி, மிகச் சிறப்பாக, எழுச்சியாக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**